4 அறிவிப்புகள்.

அரசினர் சட்ட முன்வடிவுகள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்ட முன் வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப்பெற்றுள்ளன என்று மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது—

(1) தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் விற்பனை (திருத்தம்-தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 27/1978);

(2) 1978-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (மூன்றுவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 28/1978);

(3) 1978-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 29/1978).

(ஈ) (மதுரை) காமராஜ் பல்கலைக் கழக பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்றவர்கள் குறித்து.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் காமராஜ் பல்கலைக் கழகப் பேரவைக்குத் ((Kamaraj University Senate) தேர்ந்தெடுக்கப்பெற்ற நான்கு உறுப்பினர்களின் பதவிக் காலம் 30—10—1978-ல் முடிவடைவதால் ஏற்படும் நான்கு வெற்றிடங்களுக்கு, கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர்கள் முறையாக நியமனம் செய்யப் பெற்றுள்ளனர் :—

1. திரு. சோ. பாலகிருஷ்ணன்
2. திரு. வி. எம். சுப்பிரமணியம்
3. திரு. ந. தனசேகரன்
4. திரு. அ. ரகுமான்கான்

முறைப்படி நியமனம் செய்யப்பட வேண்டிய வேட்பாளர் களின் எண்ணிக்கையும், நிரப்பப் படவேண்டிய வெற்றிடங் களின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால், மேற்கண்ட நால்வரும் காமராஜ் பல்கலைக் கழகப் பேரவைக்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என நான் அறிவிக்கிறேன்.